**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 100/2020**

**அ.சா : 1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. பிரகாசம்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **சக்கரை** |
| ஊர் | : | **நாகரசம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **சலவை தொழில்** |
| மதம் | : | |
| வயது | : | 59 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**3 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் நாகரசம்பட்டி தாயப்ப மேஸ்திரி தெருவில் குடியிருந்து சலவை தொழில் செய்து வருகிறேன். கடந்த 2016 ஆம் வருடம் 4 வது மாதத்தில் ஒரு நாள் நானும், எனது இரண்டு மனைகளும் வீட்டை பூட்டி விட்டு வீட்டின் மேல் மாடியில் அறையில் படுத்து தூங்கினோம். மறுநாள் காலை சுமார் 05.30 மணியளவில் கீழே வந்து பார்த்த போது கீழ் வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டு துணிகள் சிதறிக்கிடந்தன. பீரோவில் வைத்திருந்த 3 பவுன் நெக்லஸ், 3 பவுன் செயின், 2 பவுன் மைனர் செயின், பணம் ரூ. 3000/- காணாமல் போயிருந்தன. பிறகு இது குறித்து நான் நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. புகார் நான் கொடுத்தது தான். **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் எனது வீட்டில் காணாமல் போய் கிடைக்கப்பெற்றது. புகைப்படம்(குறுந்தகடுடன்) அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காணாமல் போன நகைகளை மூன்று முறை தனித்தனியாக நீதிமன்றம் மூலமாக பெற்றுக்கொண்டேன். மேற்படி நகைகளை கொரோனா

கலத்தில் கஷ்டமாக இருந்த காரணத்தால் விற்றுவிட்டேன். அதனால் மேற்படி நகைகளை என்னால் ஆஜர்படுத்த இயலாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நகையை யார் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. டாலர் செயின் 2 பவுன் திருடு போனதாக கூறியுள்ள நகையை நான் பெற்றுக்கொண்டேன். திருடு போன நகைகள் பழைய நகைகள் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து பெற்ற நகைகள் புதிய நகைககள் என்றால் சரிதான். நகையை விற்றுவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் நகையை ஆஜர் படுத்தினால் உண்மை தெரிநதுவிடும் என்பதற்காக ஆஜர்படுத்தவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 100/2020**

**அ.சா : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திருமதி.மலர்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **பிரகாசம்** |
| ஊர் | : | **நாகரசம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **சலவை தொழில்** |
| மதம் | : | |
| வயது | : | 50 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**3 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

**நான் நாகரசம்பட்டியில் குடியிருந்து சலவை தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். கடந்த 2016 ஆம் வருடம் ஒரு நாள் இரவில் நானும் எனது கணவரின் முதல் மனைவி புனிதாவும் எங்கள் வீட்டின் கீழ் வீட்டை பூட்டி விட்டு மாடியில் உள்ள அறையில் தூங்கி விட்டு மறுநாள் காலை 06.00 மணியளவில் கீழ் வீட்டை வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு , பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருந்த துணி சிதறிக்கிடந்தன. பீரோவில் இருந்த நகைகள் காணாமல் போயிருந்தது. இது குறித்து எனது கணவர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றம் மூலமாக எனது கணவர் நகைகைய பெற்றுவந்தார். மேற்படி நகைகள் உள்ளதா என்று எனது கணவருக்குதான் தெரியும்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**திருடு போன நகை யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. திருடு போன நகை வேறு என்றும், நீதிமன்றத்தில் இருந்து பெற்ற நகைகள் வேறு என்றும் சொன்னால் சரிதான். எவ்வளவு நகை திருடு போனது என்று எனக்கு தெரியாது.**

**திருடு போன நகைகள் பழைய நகைகள் என்றால் சரிதான். அது எனது தாயார் எனக்கு சீதனமாக கொடுத்தது ஆகும்.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு**
**கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து**
**காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென**
**ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 100/2020**

**அ.சா : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. கமலேசன்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **வெங்கட்ராமன்** |
| ஊர் | : | **நாகரசம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **சலவை தொழில்** |
| மதம் | : | |
| வயது | : | 55 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**3 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u>:**

**நான் நாகரசம்பட்டியில் குடியிருந்து சலவை தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர். எனது வீடு அ.சா.1 ன் வீட்டிலிருந்து 3 வது வீடாகும். கடந்த 2016 ஆம் வருடம் ஒரு நாள் அ.சா.1 ம் அவரது குடும்பத்தினரும் விடியற்காலையில் கூச்சலிடும் சத்தம் கேட்டு அவரது வீட்டருகே சென்று பார்த்த போது அவருடைய வீட்டின மேல் மாடியில் இருந்து காலை கீழே வந்து பார்த்த போது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டும், பீரோ உடைக்கப்பட்டும் நகை காணாமல் போனதாக தகவல் சொன்னார். இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விப்பட்டுதான் சாட்சியம் அளிக்கிறேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 100/2020**

**அ.சா : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **திரு. செல்வம்** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | **இராமசாமி** |
| ஊர் | : | **நாகரசம்பட்டி** |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | **விவசாயம்** |
| மதம் | : | |
| வயது | : | 78 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 13.06.2023**

**3 வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**முதல் விசாரணை:**

**நான் நாகரசம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். நான் போக்குவரத்து கழகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுள்ளேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 13.04.2016 ஆம் தேதி விடியற்காலை 07.00 மணியளவில் அ.சா.1 ன் வீட்டில் பூட்டு உடைக்கப்பட்டு திருடு போனதாக சொன்னார். நான் அவர் வீட்டிற்கு சென்று பார்த்தேன். வீட்டின் கதவு பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. வீட்டிற்குள் சென்ற போது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் வைத்திருந்த நகை, பணம் காணாமல் போனதாக அ.சா.1 சொன்னார். இது குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விப்பட்டுதான் சாட்சியம் அளிக்கிறேன். புகார் கொடுக்கும் போது அ.சா.1 உடன் உடன் சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு என்னிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை. திருடு போனதாக சொல்லப்படும் தினத்தன்றே காவல் நிலையம் சென்றேன்.**

**சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.**

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.**